5th July 1962]

னும் செய்திருந்தால் அரசாங்கத்தின் கவனத்திற்கோ அதிகாரிகளின் கவனத்திற்கோ கொண்டு வந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. பொன்னையா : பரம்பரையாக ஜமீன்தார்களாக இருந்து வந்தவர்கள் சர்க்கார் பூமியைச் சேர்த்து உழுது வந்தார்கள். இப்போது சர்வே செய்ததில் அந்தப் பூமிகள் எல்லாம் சர்க்காரைச் சேர்ந்தவை என்று தெரிய வருகிறது. அந்த நிலங்களை ஏற்கனவே விவசாயம் செய்து வந்த விவசாயிகளுக்கு கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. வி. ராமையா : நிலமில்லாத விவசாயிகளுக்கு, அரசாங்கத்திற்குத் தேவைப்படாத நிலங்களை விநியோகம் செய்து கொடுக்க வேண்டும். அந்த அடிப்படையில் இந்த விநியோகம் நடக்கும் என்று நம்புகிறேன்.

Agricultural College

* 143 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state--

(*a*) the present stage of the proposal to open a new Agricultural College during the Third Plan period; and

(*b*) the details thereof?

The Hon. Sri P. KAKKAN : No decision has yet been taken as to where the Second Agricultural College to be started during the Third Plan period is to be located.

திரு. எம். கலியாணசுந்தரம் : இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை என்பதை அறிய சந்தோஷப்படுகிறேன். முடிவு எடுப்பதற்கு முன்பு ஒரு ஆலோசனையை அரசாங்கம் கவனிப்பார்களா? புதிதாக ஏற்படுத்தப்பட இருக்கும் கல்லூரியைக் காவேரி டெல்டா பிரதேசத்தில் வைக்கும் யோசனை இருக்கிறதா?

கனம் திரு. பூ. கக்கன் : முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை. பரிசீலனை செய்யும்போது இது பற்றிக் கவனிக்கப்படும்.

Sri R. V. SWAMINATHAN : Sir, will the Hon. Minister be pleased to consider the location of this Agricultural College at Madurai, the headquarters of Pandya Nad as that will serve the three districts of Madurai, Ramanathapuram and Tirunelveli?

The Hon. Sri P. KAKKAN : The hon. Member's suggestion also will be considered.

திரு. கே. ஏ. மதியழகன் : மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் விவசாய அபிவிருத்திக்கான காரியங்களை நாம் நிறையச் செய்ய வேண்டியிருக்கிறது. இன்றைய தினம் கோயம்புத்தூரில் ஒரு விவசாயக் கல்லூரியும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஒரு விவசாயக் கல்லூரியும் இருக்கிறது. அவற்றிலிருந்து முறையே 150, 50 மாணவர்களைத்தான் தயாரித்து அனுப்புகிறார்கள். இந்த நிலையில் இன்னும் ஒரு கல்லூரியை அமைப்பதால் நம்முடைய தேவையை நிறைவேற்றிவிட முடியாது. கோவையில் ஒரு ரூரல்

யூனிவர்ஸிடியை ஆரம்பிக்க யோசனை செய்யப்பட்டது. அது பற்றியும் இந்தச் சமயத்தில் கவனம் செலுத்தப்படுமா என்பதை கனம் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

கனம் திரு. பூ. கக்கன் : மூன்றுவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 2,235 விவசாயப் பயிற்சி பெற்ற மாணவர்களைத் தயாரிக்க வேண்டுமென்பது நோக்கம். இப்போது அரசாங்கத்தால் நடத்தப்படும் கல்லூரியில் 1,210 பேர் பயிற்சி பெறுவர். தனிப்பட்டவர்கள் அக்ரிகல்சுரல் காலேஜ் ஏற்படுத்த முன்வந்தால் பரிசீலிக்கலாம். இப்போது கமிட்டி ஏற்படுத்தப்பட்டு எல்லா விஷயங்களும் பரிசிலனையில் இருக்கின்றன.

திரு. கி. இரா. சம்பந்தம் : தஞ்சையில், ஆடுதுறையில் இப்போது 'பார்ம்' ஒன்று இருக்கிறது. அதன் மூலம் ஜில்லா பூராவும் விவசாயம் நடத்தப்படுகிற காரணத்தால் அங்கேயே இந்த விவசாயக் கல்லூரியை ஏற்படுத்துவது பற்றி அமைச்சர் அவர்கள் ஆலோசிப்பார்களா?

கனம் திரு. பூ. கக்கன் : அண்ணமலைப் பல்கலைக் கழகத்தால் நடத்தப்படும் விவசாயக் கல்லூரி தஞ்சாவூருக்குப் பக்கத்தில் இருக்கிறது. இதுபற்றியெல்லாம் கமிட்டியில் முடிவு செய்யப்படும்.

திரு. சா. கணேசன் : விவசாயக் கல்லூரியின் நோக்கம், நீர் வளம் உள்ள இடத்திலிருந்து மட்டும் ஆராய்ச்சி செய்வது, அல்லது கல்வி போதிப்பது என்பதல்ல. வளம் இல்லாத பிராந்தியங்களிலும் அங்கு எப்படி பயிரைப் பெருக்க முடியும், வளர்க்க முடியும் என்று பார்த்து கற்பிக்க அனுகூலமாக இருக்க வேண்டுமென்பதை ஒப்புக்கொள்கிறோம் என்று கருதுகிறேன். (ஒரு கனம் அங்கத்தினர் : காரைக்குடி என்று சொல்கிறீர்களா?) காரைக்குடி என்று சொல்லவில்லை, வருதுநகர் அல்லது புதுக்கோட்டை எந்த இடமாக வேண்டுமானுலும் இருக்கட்டும். வளமற்ற பிராந்தியங்களிலும் கல்லூரி அமைத்து அதன் மூலம் கல்வி பயிற்றுவிக்க அரசாங்கம் ஆலோசிக்குமா? என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: விவசாயக் கல்லூரி அமைப்பதற்கு எந்த இடம் தகுதியாகயிருக்கிறதோ அதைப் பார்த்து முடிவு செய்யப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : எந்த இடத்தில் வைப்பதாக இருந்தாலும் சரி புதுக் கல்லூரி திறப்பதை அடுத்த கல்வி ஆண்டுக்குள்ளாக முடிவெடுத்து திறப்பார்களா?

கனம் திரு. பூ. கக்கன் : இதற்கு உடனடியாக பதில் சொல்வதற்கில்லை. தனிக் கேள்வி வேண்டும்.

திரு. பி. கே. மூக்கையா தேவர்: மதுரையில் இருந்த தனிப்பட்ட நபர் ஒருவர் விவசாயக் கல்லூரி ஆரம்பிக்க வேண்மென்று அரசாங்கத்தை அணுகியதுண்டா? அது சம்பந்தமாக என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன?

கனம் திரு. பூ. கக்கன்: ஒரு தனிப்பட்ட சகோதரர் அரசாங்கத்திற்கு ஒரு கல்லூரி வைப்பதற்காக எழுதியிருக்கிறர். 3 லட்சம் பெறுமான நிலங்கள் மட்டும் கொடுத்திருக்கிறர்கள். இன்

5th July 1962]

ஞெரு கண்டிஷன். எஜுகேஷன் ஸ்கீமை யொட்டி ஒத்துக்கொள் வதானுல் 4 லட்சம் ரூபாய் 'நான்' ரெக்கரிங் எக்ஸ்பென்டிச்சருக் காகவும் 75,000 ரூபாய் 'ரிக்கரிங்' எக்ஸ்பென்டிச்சருக்காகவும்' கொடுப்பதாகச் சொல்லியிருக்கிருர்கள். அது பின்னர் பரிசீலனே செய்யப்படும்.

Unclean occupations

* 144 *Q*.—SRI V. KRISHNAMOORTHY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state--

(*a*) whether the Government have received any circular from the Central Government for improving the working conditions of persons engaged in unclean occupations; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes. Sir.

(*b*) In pursuance of the communications from the Government of India, this Government have been encouraging the Municipalities and Panchayats to dispense with the practice of carrying night-soil in buckets or baskets as headloads by the introduction of wheelbarrows for the use of scavengers with the offer of subsidy available under the Centrally sponsored programme. Nine hundred and twenty-three wheelbarrows have been supplied during the Second Five-Year Plan period. Under the Third Five-Year Plan a provision of Rs. 20 lakhs has been included to subsidize the cost of purchase and supply of wheelbarrows by the local bodies so that the practice of carrying night-soil on headloads may be abolished by a phased programme.

திரு. வே. கிருஷ்ணமூர்த்தி : சுதந்திரம் கிடைத்து பதினேந்து ஆண்டுகளாகியும் இந்நாட்டிலே பல முடிசூடா மன்னர்கள் மனிதனே வைத்து இழுக்கிற இழிதொழிலாகக் கருதப்படுகிற ரிக்ஷாத் தொழிலேயும் இத்தகைய அசுத்தத் தொழிலாகக் கருதி இச்சர்க்கார் அத்தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு வேறு வேலே கொடுத்து இந்த ரிக்ஷா இழுக்கும் கொடுமையை அகற்ற முன்வருவார்களா?

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே கேட்கப்பட்ட கேள்விக் கும் இதற்கும் சம்பந்தமில்லே, தனிக் கேள்வி வேண்டும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அசுத்தங்களே கையால் அள்ளுவ தும் கூடையில் போட்டு தலேயில் சுமக்கும் பழக்கங்களும் எந் தெந்த முனிஸிபாலிடியில் அறவே ஒழிக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. பூ. கக்கன் : எந்தெந்த முனிஸிபாலிடிகளில் என்ற தகவல் இப்போது என்னிடம் இல்லே. அரசாங்கம் கொடுக்கிற சலுகைகளேப் பெற்று துரிதமாக உதவி பெற எந்தெந்த முனிஸி பாலிட்டிகள் விரும்புகின்றனவோ அப்பேர்ப்பட்ட முனிஸி பாலிட்டிகளுக்கு உதவ சித்தமாக யிருக்கிருேம்.